# டிசம்பர் – 26 – செவ்வாய்

## புனித முடியப்பர்

## ஆம், என் கற்பாறையும் கோட்டையும் நீரே, திபா. 31:3

### முதல் வாசகம்: திருத்தூதர் பணி 6:8–10, 7:54 - 59

அக்காலத்தில், ஸ்தேவான் அருளும் வல்லமையும் நிறைந்தவராய் மக்களிடையே பெரும் அருஞ்செயல்களையும்இ அரும் அடையாளங் களையும் செய்து வந்தார். அப்பொழுது உரிமையடைந்தோர் எனப்படுவோரின் தொழுகைக்கூடத்தைச் சேர்ந்த சிலரும் சிரேன், அலக்சாந்திரியா நகரினரும் சிலிசியா, ஆசியா மாநிலத்தவரும் ஸ்தேவனோடு வாதாடத் தொடங்கினர். ஆனால் அவரது ஞானத்தையும்இ தூய ஆவி வாயிலாக அவர் பேசிய வார்த்தை களையும் எதிர்த்து நிற்க அவர்களால் இயலவில்லை. இவற்றைக் கேட்டவர்கள் உள்ளம் கொதித்தெழுந்து அவரைப் பார்த்துப் பற்களை நறநறவெனக் கடித்தார்கள். அவரோ தூய ஆவியின் வல்லமையை நிறைவாய்ப் பெற்று, வானத்தை உற்று நோக்கினார். அப்போது கடவுளின் மாட்சியையும் அவர் வலப்பக்கத்தில் இயேசு நிற்பதையும் கண்டு, ”இதோ, வானம் திறந்திருப்பதையும், மானிட மகன் கடவுளது வலப்பக்கத்தில் நிற்பதையும் காண்கிறேன்” என்று கூறினார். ஆனால் அவர்கள் தங்கள் செவிகளை அடைத்துக் கொண்டு பெருங் கூச்சலிட்டு ஒருமிக்க அவர்மேல் பாய்ந்தார்கள். நகரத்திற்கு வெளியே இழுத்துக் கொண்டு போய் அவர்மேல் கல்லெறிந்தார்கள். சாட்சிகள் தங்கள் மேலுடைகளைச் சவுல் எனும் இளைஞரிடம் ஒப்படைத்தார்கள். அவர்கள் ஸ்தேவான்மீது கல்லெறிந்தபோது அவர், ”ஆண்டவராகிய இயேசுவே, எனது ஆவியை ஏற்றுக்கொள்ளும்” என்று வேண்டிக் கொண்டார். பின்பு முழந்தாள்படியிட்டு உரத்த குரலில், ”ஆண்டவரே, இந்தப் பாவத்தை இவர்கள் மேல் சுமத்தாதேயும்” என்று சொல்லி உயிர்விட்டார்.

**பதில்பாடல் :** ஆண்டவரே உமது கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன்.

### நற்செய்தி : மத்தேயு 10: 17 – 22

அக்காலத்தில் இயேசு தம் திருத்தூதர்களுக்குக் கூறியது: ”எச்சரிக்கையாக இருங்கள். ஏனெனில் மனிதர்கள் உங்களை யூதச் சங்கங்களிடம் ஒப்புவிப்பார்கள். தங்கள் தொழுகைக் கூடங்களில் உங்களைச் சாட்டையால் அடிப்பார்கள். என் பொருட்டு ஆளுநர் களிடமும் அரசர்களிடமும் உங்களை இழுத்துச் செல்வார்கள். இவ்வாறு யூதர்கள் முன்னும் பிற இனத்தவர் முன்னும் சான்று பகர்வீர்கள். இப்படி அவர்கள் உங்களை ஒப்புவிக்கும்பொழுது, ”என்ன பேசுவது, எப்படிப் பேசுவது” என நீங்கள் கவலைப்பட வேண்டாம். நீங்கள் என்ன பேசவேண்டும் என்பது அந்நேரத்தில் உங்களுக்கு அருளப்படும். ஏனெனில் பேசுபவர் நீங்கள் அல்ல. மாறாக, உங்கள் தந்தையின் ஆவியாரே உங்கள் வழியாய்ப் பேசுவார். சகோதரர் சகோதரிகள் தம் உடன் சகோதரர் சகோதரிகளையும் தந்தையர் பிள்ளை களையும் கொல்வதற்கென ஒப்புவிப்பார்கள். பிள்ளைகள் பெற்றோர்க்கு எதிராக எழுந்து அவர்களைக் கொல்வார்கள். என் பெயரின் பொருட்டு உங்களை எல்லாரும் வெறுப்பர். இறுதிவரை மன உறுதியுடன் இருப்போரே மீட்கப்படுவர்” என்றார்.

**தியானம்:** “குழந்தை வடிவில் வந்த குரு” கிறிஸ்து இயேசுவின் பிறப்புவிழாவின் மறுநாளில் அன்னையாம் திருச்சபை கிறிஸ்துவுக்காக வாழ்ந்து இறந்த திருச்சபையின் முதலாவது வேதசாட்சியின் திருவிழாவைக் கொண்டாடுகின்றாள். புனித முடியப்பர் என அழைக்கப்படும் St. Stefan கிறிஸ்து இயேசுவுக்காக சித்திரவதைகள் அனுபவித்து, இரத்தம் சிந்தி, வேதசாட்சியாக உயிரைக்கொடுத்தவர் என வரலாறு தெரிவிக்கிறது. இறைமகன் கிறிஸ்து போலவே, இப்புனிதரும் உண்மை பேசியதன் காரணமாக, தவறாக குற்றம் சுமத்தப்பட்டுக் கிறிஸ்துவுக்குப் பின் 36ம் ஆண்டில் இறந்ததாக குறிப்பிடுகின்றார்கள். இப்புனிதர் “மரண வேளையிலும் இறைவனை நோக்கியவராக, தனது கொலையாளிகளை மன்னியும்” என வேண்டுதல் செய்தவராக மகிழ்ச்சியோடு இறந்தார் என இவரது மரணம் குறித்த பாரம்பரிய ஏடுகள் தெரிவிக்கின்றன. இன்றைய நற்செய்தி வாசகங்களின் வெளிச்சத்திலே புனித முடியப்பரது வாழ்வை ஆழமாக நோக்கினால்: “என் பொருட்டு ஆளுனர்களிடமும், அரசர்களிடமும் உங்களை இழுத்துச் செல்வார்கள். இவ்வாறு யூதர்கள் முன்னும், பிற இனத்தவர் முன்னும் சான்று பகர்வீர்கள்” என்ற இறைமகன் இயேசுவின் ஒவ்வொரு வார்த்தைக்கும் முதலாவது வேதசாட்சியான புனித முடியப்பர் அருளும் வல்லமையும் நிறைந்தவராய் அர்த்தம் கொடுத்து வாழ்ந்தார் என்பதனை எவருமே மறுக்கமுடியாது. எனவே குழந்தை வடிவில் வந்த குருவின் வார்த்தைகளுக்குக் கட்டுப்பட்ட புனித முடியப்பரது வாழ்க்கையை எமக்கு உதாரனமாக்குவோம். இறைமகன் இயேசுவை அவர் தனது மீட்பராக ஏற்றக்கொண்ட விசுவாசத்தை ஆராய்ந்து பார்ப்போம். இறைமகன் இயேசுபோன்று, புனித முடியப்பரும் தன்னைக் கொலை செய்தவர்களை மன்னித்த மனப்பாங்கை எமது உணர்வில் அனுமதிப்போம். நாமும் உண்மைக் கிறிஸ்தவர்களாக, கிறிஸ்தவ விழுமியங்களோடு வாழ முயற்சிசெய்வோம். கிறிஸ்தவம் என்பது கிறிஸ்து அவன் எனக் கிறிஸ்துவுக்காக வாழ்வது, மாறாக கிறிஸ்தவன் என்ற பெயரோடு வாழ்வதல்ல. உணர்ந்து நடப்போம். – ஆமென்.